Idols

* 167 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that some idols were removed from Sembu Urani at Eachangudi Village, Thanjavur district, during 1st quarter of 1970;

(b) if so, the details of the idols lost and their value; and

(c) the action so far taken in the matter?

தெய்வச் சிலைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்குடி கிராமம், செம்பூருணியிலிருந்து தெய்வச் சிலைகள் சில அகற்றப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காணமற் போன சிலைகளும், அவற்றின் மதிப்பும் பற்றிய விவரங்கள் யாவை ?

(உ) இது குறித்து இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதியில் இந்தக் கேள்வியை முதலமைச்சரிடம் கேட்டேன். இல்லை என்று சொன்னார். பத்திரிகையில் ஏற்கெனவே செய்தியாக வந்திருக்கிறது என்று தெரிவித்தேன். அதற்குப் பிறகு, கைப்பற்றப்பட்ட சிலைகள் தஞ்சை தாலூகா நிலையத்தில் இருப்பதாக அறிந்தேன். பிடிபட்டவர்கள் நிலை என்ன? போட்ட வழக்குகள் என்னவாயிற்று என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தஞ்சை பக்கத்தில், ஈச்சங்குடியில் 1970-லிருந்து இன்று வரை எந்தச் சிலையும் திருட்டு போகவில்லை. கிராம அதிகாரி விசாரித்து, காவல் நிலையத்திலும் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்குகள் பதிவாகவில்லை என்று தெரிவித்திருக்கிறேன். அதே நேரத்தில் பக்கத்து கிராமத்தில் ரிகார்டில் கொண்டுவரப்படாத சிவ, விஷ்ணு, ஐயனார் கோயில்

1972 ஆகஸ்ட் 21]

இருக்கிறது. அர்ச்சகர்களை விசாரித்துப் பார்த்தோம். எந்தவித மான சிலையும் திருட்டுப் போகவில்லை என்று அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : திருட்டுப் போன சிலைகள் போலீஸ் நிலையத்தில் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற பத்திரிகைச் செய்தியை முதலமைச்சருக்குத் தெரிவித்தேன். அது மட்டுமல்ல, விசாரணை செய்து, நடவடிக்கை எடுத்து, சிலைகள் ஒரு இடத்தில் இருப்பதையும் கண்டுபிடித்தார்கள். இதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட செய்தியில் எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. இருந்தாலும் அவர்கள் மேலும் சொல்லுகிற காரணத்தால், இதைப் பற்றி விசாரிக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : கோவிலாகவும் இருக்கலாம், புதை பொருளாகவும் இருக்கலாம். அதுபற்றிய விவரமில்லை.

*168. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a number of stolen idols were recovered in Tuticorin about 23rd January 1972;

(*b*) if so, the details of the (i) idols recovered and (ii) their value; and

(*c*) the steps taken to trace the persons responsible for these thefts?

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருடுபோன கடவுளர் சிலைகள் பல 1972-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் நாள் அளவில் தூத்துக்குடியில் மீட்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், (1) கடவுளர் சிலைகள் (2) அவற்றின் விலை மதிப்பு குறித்த விவரங்கள் யாவை ?

(உ) இந்தத் திருட்டுகளுக்குப் பொறுப்பாளிகளைக் கண்டு பிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?